இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைமீது ஏறினார். அவர் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது முகத்தோற்றம் மாறியது; அவருடைய ஆடையும் வெண்மையாய் மின்னியது. மோசே, எலியா என்னும் இருவர் அவரோடு பேசிக்கொண்டிருந்தனர். மாட்சியுடன் தோன்றிய அவர்கள் எருசலேமில் நிறைவேற இருந்த அவருடைய இறப்பைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பேதுருவும் அவரோடு இருந்தவர்களும் தூக்கக் கலக்கமாய் இருந்தார்கள். அவர்கள் விழித்தபோது மாட்சியோடு இலங்கிய அவரையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள். (லூக்கா 9: 28-30)

# ‘கடவுளால் தேர்ந்துக்கொள்ளப்படுவது அவரது தயவு’

**கோலாலம்பூர்:** இந்த ஆண்டு, ஏப்ரல் 16, 2022 அன்று தீபகற்ப மலேசியாவில் பாஸ்கா பெருவிழா திருவிழிப்பு கொண்டாட்டத்தின் போது திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் மற்றும் நற்கருணை ஆகிய புகுமுக அருளடையாளங்களைப் பெறுவதற்கு 582 பேர் தேர்வுச் செய்யப்பட்டுள்ளனர். இதனையொட்டிய கோலாலம்பூர் மாமறைமாவட்டம் மற்றும் பினாங்கு, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டங்களின் அறிக்கைகள் பின்வருமாறு:



**கோலாலம்பூர்:** இந்த ஆண்டு, ஒமிக்கிரோன் வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் தேர்வுச் சடங்கு பங்கு மற்றும் மறைவட்ட அளவில் நடைபெற்றது. கடந்த மார்ச் 06-ம் திகதி திருமுழுக்குப் பெற 325 வேட்பாளர்களும், 122 வேட்பாளர்கள் உறுதிப்பூசுதலுக்கும் மற்றும் 28 பேர் திருஅவைக்குள் வரவேற்கப்பட பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

முன்னதாகவே முன்பதிவுச் செய்யப்பட்ட செய்தியில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள், "தேர்வுச் சடங்கின்" முக்கியத்துவம் பற்றி பேசினார். அவரது உரையில் இத்தேர்வானது, கிறிஸ்தவத்தில், கடவுள் தனது மக்களைத் தேர்ந்தெடுப்பதைக் குறிக்கிறது என்று விளக்கமளித்தார்.

“இந்த நாளில், தேர்வுச் சடங்கிற்கு உட்பட்ட வேட்பாளர்களாகிய உங்களை, கடவுள் அவரது மக்களில் ஒரு பகுதியினராகத் தேர்ந்தெடுத்ததற்காக மகிழுங்கள். ஏற்கனவே திருமுழுக்குப் பெற்றவர்கள், திருஅவையில் அங்கீகாரம் மற்றும் வரவேற்கப்பட விரும்புகிறவர்களும் மகிழுங்கள், ஏனென்றால் உங்கள் திருமுழுக்கின் மூலம் நீங்களும் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒரு பகுதி என்பதை நினைவில் கொள்வதற்கான நேரம் இந்த கொண்டாட்டமாகும். கடவுள் நம்மைத் தேர்ந்தெடுப்பது நம் செயலின் காரணமாகவோ அல்லது அதற்குத் தகுதியானவர்கள் என்பதாலோ அல்ல. மாறாக, இந்த அழைப்பு கடவுள் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகும்” என்று அறிவுறுத்தினார்.

“இறுதியாக, இந்தக் கொண்டாட்டத்தில் என்னால் உடல் ரீதியாக உங்களோடு இருக்க முடியாவிட்டாலும், நான் உங்களுடன் இணைந்திருக்கிறேன் என்பதை அறிந்து, உங்களுக்காக இறைவேண்டல் செய்கிறேன். விரைவில் சூழ்நிலைகள் மேம்படும் என்றும், எதிர்காலத்தில் நேருக்கு நேர் சந்திக்க இறைவன் நமக்கு வாய்ப்பளிப்பார் என்றும் நம்புகிறேன் என்று அனைவரையும் வாழ்த்தி ஆறுதல் கூறினார்.

## புக்கிட் மெர்தாஜாம், பினாங்கு

நீங்கள் தனியாக இல்லை, திருஅவை உங்களோடு உள்ளது பினாங்கு மறைமாவட்டத்தின் தேர்வுச் சடங்கானது, புக்கிட் மெர்தாஜாமில் உள்ள புனித அன்னம்மாள் மைனர் திருத்தலத்திலும் ஈப்போ, பெம்பு கார்டனிலுள்ள இடைவிட சகாய அன்னை ஆலயத்திலும் முறையே மார்ச் 5 மற்றும் 6-ம் திகதிகளில் நடைபெற்றது.



பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு டத்தோ ஸ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் இரண்டு இடங்களில் அத்தேர்வுச் சடங்கைகொண்டாடினார் என்பது குறிபபிடத்தக்கது பினாங்கு மறைமாவட்டம் முழுவதிலும் உள்ள பங்குகளிலிருந்து இருந்து ஏறத்தாழ 112 வேட்பாளர்கள் பாஸ்கா பெருவிழா திருவிழிப்பின்போது புகுமுக அருளடையாளங்களைப் பெறுவதற்கான இறுதிக் கட்டத் தயாரிப்பில் தங்களை உறுதிப்படுத்த குழுமியிருந்தனர். அத்திருச் சடங்கு கொண்டாட்டங்களின் போது, ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் மறையுரையில் ஒளியும் துப்புரவும் பெறுதல் குறித்து விவரித்தார். இக்காலக்கட்டத்தில் ஒவ்வொருவரும் தூய்மை நிலையை அடைய வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நோக்கி, "தூய ஆவியானவர் நம்முடன் செயலாற்ற வேண்டுமா? கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் நாம் வேலை செய்ய விரும்புகிறோமா?” போன்ற கேள்விகளை முன்வைத்தார். நிறைவாக, தொடரும் 40 நாள்களாக தேர்வுப் பெற்றவர்களுக்காக இறைவேண்டல் செய்து வருவதாகவும் கூறினார்.

**தங்காக், ஜொகூர்:** ஜொகூர் மறைமாவட்டத்தில், இவ்வாண்டு அதிகரித்துவரும் கோவிட் -19 தொற்றின் காரணமாக இரு ஊர்களில் கடந்த மார்ச் 5 மற்றும் 6-ம் திகதிகளில் தேர்வுச் சடங்கு கொண்டாடப்பட்டது. மலாக்கா, குருபோங்கிலுள்ள புனித குவாடலூப்பே ஆலயத்திலும், தங்காக்கில் உள்ள புனித மத்தேயு ஆலயத்திலும் மேற்கண்ட புகுமுக அருளடையாளச் சடங்குகள் கொண்டாடப்பட்டன. தங்காக்கில் 12 வேட்பாளர்களும் குருபோங்கில் 43 வேட்பாளர்களும் இச்சடங்குகளில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.



நிறைவாக, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு பெர்னர்ட் போல் அவர்கள், அவரதம் மறையுரையில் நான்கு முக்கிய அம்சங்களான சந்தித்தல், ஞான ஒளி பெறுதல், அதிகாரம் பெறுதல் மற்றும் நற்செய்தி அறிவித்தல் ஆகியவற்றை வலியுறுத்தினார்.

தேர்வுச் செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் அவரவர் பங்குகளில் மூன்று ஆய்வுச் சடங்குகளுக்கு உட்படுத்தப்படுவர். இதன்வழி ஆன்மீக ரீதியல் உள்ளத் தூய்மைப் பெற்று பாஸ்கா திருவிழிப்பு கொண்டாட்டத்தில் புகுமுக அருளடையாளங்கள் பெற தகுதிப்பெறுவர்.

## பள்ளிக்குச் செல்வோம் வாரீர்! ரவாங் , புனித யூதா ததேயு பங்கு அறப்பணி

ரவாங்: இங்குள்ள புனித யூதா ததேயு பங்கின் முழு மனித வள பணிக்குழு கடந்த காலங்கள் தொட்டு ஏழை குடும்பங்களுக்கும் தேவையில் உள்ளோருக்கும் பல வழிகளில் உதவி வருகிறது.

வறுமையின் நிமித்தம் துன்புறும் மாணவர்களுக்கு பள்ளி சீருடைகள், காலணிகள், பள்ளி புத்தகப் பைகள் மற்றும் பள்ளி தொடர்பான பிற பொருட்களை வாங்குவதற்கு உதவுவதற்காக இந்த ஆண்டு ‘பள்ளிக்குத் திரும்பும்’ திட்டத்தை பணிக்குழு சமீபத்தில் தொடங்கியது. மார்ச் 5 அன்று, டாக்டர் சத்திய பிரகாஷ் சி.நடராஜன் தலைமையிலான SP Care Group சேர்ந்த சமூக ஆர்வலர்கள் குழுவை பங்கு வரவேற்றது. அவர்கள் திட்டத்தின் கீழ் தேவைப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் 45 பள்ளி பைகள் மற்றும் சிறிது உதவித்தொகையும் வழங்கியது.

டாக்டர் சத்தியா பள்ளிப் பைகளை பங்குத்தந்தை விண்சன்ட் தோமஸ் அவர்களிடம் ஒப்படைத்தார். அருள்பணி விண்சன்ட் அவர்கள் டாக்டர் சத்தியா மற்றும் குழுவின் பெருந்தன்மைக்கு நன்றி தெரிவித்தார்.

நிறைவாக, பங்கின் முழுமனித வளர்ச்சி பணிக்குழுவின் தலைவர் அகஸ்டின் ரத்னம், ‘பள்ளிக்குத் திரும்புதல்’ திட்டத்திற்கு ஆதரவளித்த SP Care Group அங்கத்தினருக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.



## உக்ரைனுக்கு மனிதாபிமான வழிகளைத் திறக்க கரித்தாஸ் வேண்டுகோள்

***வத்திக்கான்:*** போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரேனியர்களுக்கு வன்முறையில் இருந்து தப்பிக்கும் வாய்ப்பை வழங்குவதற்காக, மனிதாபிமான வழிகளைத் திறக்க வேண்டும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளுடன் அனைத்துலகக் கரித்தாஸ் அமைப்பு இணைந்துள்ளது.

உக்ரைனில் இடம்பெற்றுவரும் ரஷ்யத் தாக்குதல் குறித்து, பிப்ரவரி 27, ஞாயிற்றுக்கிழமையன்று நண்பகல் மூவேளை செப உரைக்குப்பின் தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உக்ரைனில் துன்புறுவோர் நம் சகோதரர் சகோதரிகள் என்றும், தாராள இதயத்துடன் அவர்களுக்கு மனிதாபிமான வழிகளைத் திறக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதனை மையமாகக்கொண்டு அனைத்துலகக் கரித்தாஸ் அமைப்பின் பொதுச் செயலாளர் அலோய்சியஸ் ஜான் அவர்கள், மார்ச் 1, இத்திங்களன்று, பங்கேற்ற காணொளிக் கருத்தரங்கம் ஒன்றில் உக்ரைன் மற்றும் போலந்தின் கரித்தாசின் பிரதிநிதிகள் மற்றும் ஐரோப்பிய கரித்தாசின் தலைவர் ஆகியோருடன் இணைந்து பாதிக்கப்பட்டுள்ள உக்ரேனியர்களுக்கு உதவ வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கடந்த வாரம், எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட நிலையில், உக்ரேனியர்களின் வாழ்க்கை ஒரு கனவாக மாறிவிட்டது என்று தனது தொடக்க உரையில் எடுத்துரைத்த அலோய்சியஸ் ஜோன் அவர்கள், இம்மக்களுக்கு உதவிபுரிவதில் கரித்தாஸ் அமைப்பானது முன்னின்று செயல்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.




*உக்ரைனில் உதவும் கரித்தாஸ் அமைப்பு*

சாலைகளும், கட்டடங்களும் மிகவும் மோசமாக சிதிலமடைந்துள்ளன என்றும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி வழங்கப்பட்டு வருகின்றன என்றும் எடுத்துரைத்த உக்ரைன் காரித்தாஸ் அமைப்பின் பணியாளர் அருள்தந்தை Sviatoslav அவர்கள், சிறப்பாக, கர்ப்பிணி மற்றும், குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ள பெண்களுக்கு, ஐந்து நகரங்களில் சிறப்பு ஆதரவுச் சேவைகளை வழங்க முயற்சித்து வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

# பெண்ணுரிமைகள் காக்கப்பட வேண்டும்

**வத்திக்கான்:** பாலின சமத்துவத்தைப் புறக்கணித்துவிட்டு, இந்த உலகம் கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்புக்களிலிருந்து மீண்டுவர இயலாது என்று, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமைப் பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள் கூறியுள்ளார்.

மார்ச் 08, கடந்த செவ்வாயன்று, உலக மகளிர் நாள்



சிறப்பிக்கப்படுவதையொட்டி செய்தி வெளியிட்டுள்ள கூட்டேரஸ் அவர்கள், கோவிட்-19 பெருந்தொற்றை ஒழிப்பதற்கு, பெண்கள் பரிந்துரைத்துள்ள கருத்துக்கள் மற்றும், அவர்களின் செயல்பாடுகள், நம் உலகத்தை சிறந்தநிலைக்கு மாற்றிக்கொண்டு வருகின்றன என்றும், அவை, வாழ்வின் அனைத்து நிலைகளிலும், அதிகமான பெண் தலைவர்களை வரவேற்றுள்ளன என்றும் கூறியுள்ளார்.

பெருந்தொற்று பரவியதன் எதிர்விளைவை, பெண்களும் சிறுமிகளுமே அதிகமாக எதிர்கொண்டு வருகின்றனர் எனவும், இந்நிலை ஏழ்மையை அதிகரித்துள்ளது எனவும், உலகில் ஊதியமில்லாமல் ஆற்றப்படும் பணிகளில் பெரும்பாலானவற்றை பெண்களே ஆற்றுகின்றனர் என்றும் கூட்டேரஸ் அவர்கள், தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சிறுமிகள் அனைவருக்கும் தரமான கல்வி, பெண்கள் தரமான வேலைசெய்வதற்குரிய பயிற்சிகளுக்கு முதலீடு செய்வதை உறுதிசெய்வது, பாலினத்தை அடிப்படையாகக் கொண்ட வன்முறையை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வது போன்றவையே, இந்நிலையை நிவர்த்தி செய்வதற்குரிய வழிகளாகும் என்று கூட்டேரஸ் அவர்கள் கூறியுள்ளார்.

"உறுதியான வருங்காலத்திற்கு, இன்று பாலின சமத்துவம்" என்ற தலைப்பில், இவ்வாண்டு உலக மகளிர் நாள் சிறப்பிக்கப்பட்டது.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ்: வத்திக்கான்*

# வலுவற்றவர்க்கு வாழ்வளிப்பதே, உண்மையான புரட்சி

**வத்திக்கான்:** பல்வேறு நாடுகளில் ஏழைச் சிறாரைத் தத்தெடுத்து அவர்களின் வளர்ச்சிக்கு உதவிசெய்துவரும், இத்தாலியின் "Project Agata Smeralda" என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதிகளை, மார்ச் 05, இச்சனிக்கிழமை நண்பகல் வேளையில் திருப்பீடத்தில் சந்தித்து, அவர்களின் பணிகளை ஊக்கப்படுத்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அண்மையில், புனித யோசேப்புப் பற்றி வழங்கிய மறைக்கல்வியுரை ஒன்றில், சிறாரைத் தத்து எடுப்பது பற்றிக் கூறியபோது, குடும்பம் இல்லாத ஒரு சிறுவனையோ அல்லது ஒரு சிறுமியையோ தங்கள் இதயங்களிலும், இல்லங்களிலும் வரவேற்கும் தம்பதியரை ஊக்கப்படுத்தினேன் என்றுரைத்த திருத்தந்தை, தந்தை மற்றும், தாய்மைப் பண்புகளுக்குத் திறந்தமனதாய் இருப்பதே, இந்த அமைப்பினரின் இந்த அர்ப்பணத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்று திருத்தந்தை கூறினார்.

தொலைதூர நாடுகளில் இருக்கின்ற ஒரு குழந்தைக்கு வாழ்வுகொடுப்பது, அக்குழந்தை, தான் அன்புகூரப்படுவதை உணரும், மற்றும், அடிப்படை உதவிகளைப் பெறும், இதனால் அக்குழந்தை சமுதாயத்தில் நன்றாக வளரும் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகில் ஒன்பது நாடுகளில், அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள் மற்றும், ஏனையோரின் ஆதரவால், ஏறக்குறைய ஏழாயிரம் சிறாருக்கு, இந்த நிறுவனம் உதவி வருவதற்கு நன்றி தெரிவித்தார்.

இந்த பிறரன்பு நடவடிக்கையால், இந்த நிறுவனத்தினர், உலகில் கடவுளின் கனிவன்பை, அவரது தந்தைக்குரிய பண்பைப் பரப்புகின்றனர் என்றும், இந்த உலகிற்கு இவ்விரு பண்புகளும் அதிகம் தேவைப்படுகின்றன என்றும், ஒவ்வொரு நாளும் ஆரவாரமின்றி, கைவிடப்பட்ட மற்றும், புறக்கணிக்கப்பட்ட சிறாருக்கு உதவுகின்றவர்களே, இவ்வுலகில் உண்மையான புரட்சியாளர்கள் என்றும்



*திருத்தந்தை, Agata Smeralda நிறுவனத்தின் பிரதிநிதிகள் (ANSA)*

திருத்தந்தை கூறினார். தத்து எடுக்கப்படும் ஏழைக் குழந்தைகள், புறக்கணிக்கப்படாமல், கடவுளின் பிள்ளைகள் என்ற மாண்போடு வாழ, Agata Smeralda தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் உதவுகின்றனர் என்றுரைத்து, அவர்கள் தங்கள் பணிகளைத் தொடர்ந்து நடத்துமாறு திருத்தந்தை ஊக்கப்படுத்தினார்.

இத்தாலியின் Agata Smeralda தொண்டு நிறுவனம் பிரேசில் நாட்டின் சேரிப்பகுதி மற்றும், உலகின் பல்வேறு பகுதிகளில் தெருச்சிறாருக்கு உதவி வருகின்றது. பிரேசிலில், குறைந்தது பத்தாயிரம் தெருச்சிறார் உள்ளனர். இவர்கள் அந்நாட்டின் வடகிழக்கேயுள்ள Salvador di Bahia என்ற பகுதியில், 160 குடியிருப்புக்களில் மறைப்பணியாளர்கள், மற்றும் பொதுநிலையினரின் உதவியோடு வாழ்ந்து வருகின்றனர்

# பினாங்கு மறைமாவட்டம் தவக்காலத்தை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்துகிறது

**பினாங்கு:** பினாங்கு மறைமாவட்டம் கடந்த திருநீற்று புதன் அன்று தவக்கால பரப்புரையை **ஒன்றாக இணைந்து மீட்டெடுப்போம், புதுப்பிப்போம், மறுகட்டமைப்போம்** என்ற கருப்பொருளுடன் தொடங்கியது. பினாங்கு மறைமாவட்டத்தின் கரித்தாஸ் மலேசியாவின் தலைமையில், மூன்று ஆண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் கருப்பொருளான மறுசீரமைப்பில், இந்த ஆண்டு கவனம் செலுத்துகிறது.

ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் அவரது மறையுரையில், இந்த ஆண்டுக்கான கருப்பொருள் இயேசு நமக்குக் கட்டளையிட்ட இறைவேண்டல், நோன்பு மற்றும் அறச் செயல்களில் ஈடுபடுவதை மையமாகக் கொண்டுள்ளதைக் குறிக்கிறது" என்றார். அவர் மேலும் புனித பவுல் அடிகளின் செய்தியை நினைவுகூர்ந்து, "நன்மை செய்வதில் மனந்தளராமல் இருப்போமாக! நாம் தளர்ச்சியடையாதிருந்தால் தக்க காலத்தில் அறுவடை செய்திருப்போம் (கலா 6:9) மேற்கோள்காட்டினார். நிறைவாக, கருத்துரைத்த ஆயர் அவர்கள் திருத்தந்தையின் வேண்டுகோளான, "நாம் ஒருபோதும் இறைவேண்டலிலும், மன்னிப்புக் கேட்பதிலும், தீமையை நம் வாழ்விலிருந்து அகற்றுவதிலும், அடுத்திருப்போருக்கு நம்மாலான தொண்டுகளைச் செய்வதிலும் சோர்வடையக்கூடாது" என்றும் கேட்டுக்கொண்டார்.

## தவக்கால எதிர்ப்பார்புக்கள்

### முதல் விதி

"நீங்கள் நோன்பு இருக்கும்போது, மக்கள் பார்க்க வேண்டுமென்று வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்.

### இரண்டாம் விதி

"நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.

### மூன்றாவது விதி

"மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம்"

# துன்பங்களை மனவுறுதியோடு ஏற்போம்!

தவக்காலத்தின் 2-ம் ஞாயிறு, மாட்சிமிகு இயேசுவின் உருமாற்ற ஞாயிறு. மூன்று ஒத்தமை நற்செய்திகள் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியவற்றில் இயேசுவின் உருமாற்ற நிகழ்வு இடம் பெற்றிருக்கிறது. இயேசு, மோசே, எலியா ஆகிய மூவரும் உரையாடினர் என மத்தேயுவிலும் மாற்குவிலும் எழுதப்பட்டிருந்தாலும், லூக்காவில் மட்டும்தான் இயேசுவின் இறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்கிறார் (லூக்.9:31).

எலியா விண்ணகத்திற்கு உயிரோடு எடுத்துக் கொள்ளப் பட்டார் (2அர 2:11). மோசே இறந்து அடக்கம் செய்யப்பட்டாலும், ஆனால் இன்றுவரை யாருக்கும் அவரது கல்லறை இருக்குமிடம் தெரியாது (இச.34:6). இந்த வகையில் இயேசுவின் பாடுகள் மற்றும் இறப்பில், இவ்விருவரின் பாதிப்பும் அடங்கியுள்ளது. பணிகள் நிறைவேறியக் காலத்தில் மோசே இறந்தார், அடக்கம் செய்யப்பட்டார். அவ்வாறே இயேசுவும் காலத்தின் நிறைவில் இறந்தார், அடக்கம் செய்யப்பட்டார். எலியா உயிரோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது போல் மூன்றாம் நாளில் இயேசுவும் விண்ணகத் திற்கு உயிர்த்தெழுந்தார்.

இயேசுவின் உருமாற்றமும் மிகமுக்கியமான இரண்டு இறைவாக்கினர்களின் (மோசே+ எலியா) காட்சியும், உலகிற்கு மீட்பின் மாட்சி வந்துவிட்டதன் அடையாளம் என பேதுரு கருதினார். அதனால் மூவருக்கும் கூடாரங்கள் அமைத்து இங்கே தங்கி விடுவோம் என வெகுளித்தனமாக கூறினார். அவர்கள் மூவரும் ஒரே நிலையைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தில் அவர் கூறினார். அவ்விருவரை விட இயேசு வேறுபட்டவர் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, "இவரே என் மைந்தர்; நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்" (லூக்.9:35) என ஒரு குரல் கேட்டது. உலகப் பாவத்தைப் போக்கும் செம்மறியாக பாடுகளையும் வேதனையையும் கடந்த பின்னரே மீட்பின் மாட்சியை இயேசு பெற்றுத்தருவார். இது பாஸ்கா மறைபொருளின் அனுபவத்திற்கு நம்மைத் தயார் செய்கிறது.

இயேசுவின் உருமாற்ற நிகழ்வு நமக்குத் தருகின்ற மிக முக்கியமான செய்திகளில் ஒன்று, துன்பமின்றி இன்பமில்லை என்பதாகும். இயேசு உயிர்த்து, விண்ணேற்றமடைந்து, தந்தையின் வலப்பக்கத்தில் அமர்ந்தார். அதற்கு முன்பாக அவர் பாடுகள் பட்டு, மிகக் கொடிய வகையில் சிலுவைச் சாவை அடைந்தார். அப்படியென்றால், அவருடைய சிலுவைச் சாவே அவருடைய விண்ணக மாட்சிக்குக் காரணமாகவும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற அவர் அடைந்த துன்பமே அவருடைய இன்பத்திற்குக் காரணமாகவும் அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகையால், இயேசுவின் வழியில் நடக்கின்ற நாம் ஒவ்வொருவரும் அவரைப் போன்று பாடுகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொள்கின்றபோதுதான் அவரைப் போன்று விண்ணக மகிமையை அடைய முடியும்.

இதைத்தான் இயேசுவின் உருமாற்றத்தைக் கண்கூடாகப் பார்த்த பேதுரு, "கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்குகொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்" என்கின்றார் (1 பேதுரு 4;13). எனவே, இயேசுவைப் போன்று துன்பங்களையும் சவால்களையும் தாங்கிக் கொள்ள வேண்டும்.

**தவக்காலம் 2-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | தொ.நூ15: 5-12,17-18 .21ங |
| தி. பாடல்: | 27:1. 7-8,,9abc,13-14 |
| 2ம் வாசகம்: | பிலி 3: 17-4.1 |
| நற்செய்தி: | லூக்கா 9: 28b-36 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—வாரம் 2